## சாட்சியின் வாக்குமூலம்

## திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்

**அசல் வழக்கு எண் : 150/2014**

**PW1 – திரு. சிவராமன், த/பெ. சந்திரசேகரன்**

**02.07.2025**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**நேரம் 13.15 மணி**

நான் தற்போது அம்பத்தூரில் வசித்து வருகிறேன். நான் கடந்த 15 வருடங்களாக அம்பத்தூரில் வசித்து வருகிறேன். அதற்கு முன்பதாக 1995ல் வேப்பம்பட்டில் வசித்து வந்தேன். பின்னர் அம்பத்தூரில் வசித்து வந்தேன். இறந்துபோன 1ஆம் வாதி ஞானசேகர் கஸ்டம்ஸ் குவாட்ரஸில் அண்ணாநகரில் வசித்து வந்தார். 3, 4, 5 வாதிகள் கொளத்தூரில் வசித்து வருகிறார்கள். இறந்துபோன 1ஆம் வாதி 1980 முதல் 2018 வரை அவரது இறப்புவரை கஸ்டம்ஸ் குவாட்ரஸ் அண்ணாநகரில் குடியிருந்து வந்தார். 1, 2 வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தாயார் சரோஜா அம்மாவின் சொந்தஊர் வேப்பம்பட்டு ஆகும். 1, 2 வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தந்தையின் சொந்தஊர் வரதய்யபாளையம் ஆகும். தாவா சொத்து எப்போது, யார் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் இருந்ததா என்றால் இருந்தது 1990ஆம் வருடம் அதை பாகப்பிரிவினையின் மூலம் பிரித்துக் கொடுத்தார்கள். அந்த பாகப்பிரிவினை பதிவுசெய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவுசெய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தை மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். இதர சொத்துக்கள் எனக்கு எப்படி கிடைத்தது என்றால் என் பாட்டியின் ஜெயம்மாளின் சொத்தாகும். என் பாட்டியின் சொத்துகள் உயில் மூலமாக எனக்கு கிடைக்கப் பெற்றது. அந்த சொத்தை மனைப்பிரிவு ஆன பிறகு தான் பிரித்தோம் என்றால் சரிதான். மனைப்பிரிவு போடும்போது பூங்காவிற்கு என்று இடம் ஒதுக்கினார்கள் என்றால் சரிதான். பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தை நான் மனையாக்கி விற்க

முயற்சித்தேன் என்றால் சரியல்ல. ஊராட்சி மன்றம் என் மீது வழக்கு போட்டது என்றால் நாங்கள் தான் அவர்கள் மீது வழக்கு போட்டோம். அது அசல் வழக்கு எண் 145/2013 ஆகும். ஊர் பஞ்சாயத்து தலைவர் அதை வீடாக கட்டி விற்க முயற்சித்தார். ஆகவே நானும் 1ஆம் வாதியும் வழக்கு தாக்கல் செய்தோம். 1ஆம் பிரதிவாதி தரப்பினராக எங்களுடன் வரவில்லை என்றால் சரிதான். ஆகவே அவரை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு போட்டோம் என்றால் அவர் பஞ்சாயத்து தலைவருடன் சேர்ந்து விற்க முயற்சித்தார்கள். ஆகவே அவரை வாதியாக சேர்க்கவில்லை. அந்த வழக்கில் ஸ்டே வாங்கியுள்ளார்கள். பூங்காக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை விற்பதற்காக நான் வழக்கு தொடுத்தேன் என்றாலும் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. 20/04/2022ல் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை என் தாயார் 1ஆம் பிரதிவாதிக்கு எப்போது செட்டில்மெண்ட் செய்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 10/11/1995ல் செட்டில்மெண்ட் செய்யப்பட்டதை பற்றி (ஆவண எண் 4415/1995) எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் தந்தை எந்த வருடம் இறந்தார் என்றால் 2003ஆம் இறந்தார். இறக்கும் வரை என் தந்தை நல்ல நிலையில் தான் இருந்தார். 1ஆம் பிரதிவாதிக்கு என் தாயார் தாவா சொத்தை செட்டில்மெண்ட் செய்துள்ளார் என்றால் அதில் என் தந்தை சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் பிரதிவாதியிடமிருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**நேரம் 13.30 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.